[1979 மார்ச் 21

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, வரதமாநதித் திட்டம் பழனி தாலுகாவில் இருக்கிறது. வரதமா நதி கீழே 4 குளங்களும், அணைக்கட்டுகளும் இருக்கின்றன. அவைகளிலே எல்லாம் நிரம்பிய பின்னர்தான், மேலே உள்ள நீர்த் தேக்கத்திலே தண்ணீர் தேக்கி வைக்கப்படுகின்றது. இப்போது வருகின்ற வரத்து, கீழே இருக்கக்கூடிய அணைக்கட்டுகளும், குளங்களும் நிரம்பிய பின்னர், அங்கே நீர் தேக்கி வைப்பதற்குப் போதுமான அணைக்கட்டு இருக்கின்ற காரணத்தினால், மேலும் இப்படிப்பட்ட ஒரு அணைக்கட்டை மேல் பகுதியிலே கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை. இப்போது கிடைக்கின்ற ஆயக்கட்டு மொத்தத்திலே 5,202 ஏக்கர் 45 செண்ட். இது போதுமான அளவாக இருக்கிறது.

Water overflowing from Sathanur Dam

* Q No. 494— Thiru C. MANICKAM

Thiru G. RAGOTHAMAN: Will the Hon. the Minister for Agriculture and Irrigation be pleased to State.

(a) the steps taken to utilise the water overflowing from the Sathanur Dam; and

(b) Whether proposals are under consideration to put canals to divert the over-flowing waters for irrigation?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) சாத்தனூர் அணையில் மிகுதியாக உள்ள நீரைப் பயன்படுத்துவதற்காக சாத்தனூர் வலதுபுற கால்வாய் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. அரசால் ரூ. 202 லட்சத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட இத்திட்டத்தின்படி சுமார் 4,896·45 ஹெக்டேர் பரப்பு நிலம் (12,090 ஏக்கர்) நன்செய் சாகுபடியின்கீழ் கொண்டு வரப்படும். இத்திட்டம் இப்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது.

(ஆ) சாத்தனூர் வலதுபுறக் கால்வாயின் ஒரு கிளைக் கால்வாயை இராமராஜபுரம் அணைக்கட்டிலிருந்து, ஏரிகளுக்கு நீர் கொண்டு செல்லும் இராமராஜபுரம் கால்வாயுடன் இணைத்து அதன் மூலம் சாத்தனூர் அணையில் மிகுதியாகவுள்ள நீரைத் திருப்பி விட ஒரு திட்டம் அரசுக்கு வந்துள்ளது. இத்திட்டத்திற்கான செலவு ஒரு லட்சம் ரூபாய் ஆகும். இத்திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

1979 மார்ச் 21]

திரு. த. வேணுகோபால் : சாத்தனூரில் அணையிலிருந்து மழைக் காலங்களில தண்ணீர் நிரம்பி வெளியே செல்லும் காலங்களில் அந்தத் தண்ணீரை விவசாயிகள் பயன்படுத்தும் வகையில் தண்டராம்பட்டு திருவண்ணாமலை தொகுதிகள் உள்ளடங்கிய கிராமங்களுக்கு நீரைப் பாய்ச்ச கால்வாய்கள் வெட்ட ஆய்வுகள் செய்யப்பட்டு நடைமுறையில் கொண்டு வரப் போவதாக அறிகிறேன். அந்தப் பணி எப்போது முடிவுறும் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : அதற்காகத் தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்லுகிறேன்.

திரு. சி. ராமநாதன்: சாத்தனூர் அணையிலிருந்து தண்ணீரை கோமுகி அணைக்குக் கொண்டு வர முடியுமா ? கோமுகி அணையினால் பாதிக்கப்பட்ட விருத்தாசலம் அணைக்கட்டுக்குத் தண் ணீர் விடப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : அதற்கும் தனிக் கேள்வி போட கேட்டுக் கொள்கிறேன்.

திரு. துரை முத்துசாமி : அமைச்சர் அவர்கள் இராமராஜபுரம் அணைக்கட்டுக்கு ஒரு லட்சத்து சில்லறை செலவு செய்வதாகச் சொன்னார்கள். அது என்னுடைய தொகுதியில் இருக்கிறது. அதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். வலது பக்கம் கால்வாய் வேலைத் திட்டம் முடிவடைந்து விட்டதா ? எப்போது தண் ணீர் திறந்து விடப்படும் ? அதனால் பயனடையக் கூடிய மொத்த கிராமங்கள் எத்தனை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : வலதுபுறக் கால்வாய்த் திட்டம் ஏற்கனவே முடிந்து விட்டது. நஞ்சை பாசனமானால் 12,090 ஏக்கருக்குப் பாசன வசதி ஏற்படும். வலதுபுற ஆயக்கட்டின் பகுதியில் இருக்கும் மண் சிவப்பு மண்ணாக இருக்கும் காரணத்தால் புஞ்சை பாசனத்திற்கு மாற்றி விடலாமா என்ற யோசனையை அரசு பரிசீலனை செய்து வருகிறது. தருமபுரியில் பாம்பார் நீர்த் தேக்கத் திட்டம், கெலவரப்பள்ளி நீர்த்தேக்கத் திட்டம் இரண்டும் எப்படி புஞ்சைப் பாசனத்திற்கு பயன்பட்டு வருகிறதோ அதே போன்று இங்கும் புஞ்சைப் பாசனத்திற்குப் பயன்படுத்தினால் 21,000 ஏக்கர் பாசன வசதி பெறும் என்று பொறியாளர்கள் குறிப்புக் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, அது அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்னொரு கேள்வி கேட்டார்கள். என்னிடத்தில் குறிப்புகள் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் விவரமாகச் சொல்லுகிறேன்.